செ.வெ.எண்.879 நாள்.24-11-09

# பத்திரிக்கைச் செய்தி

## விதிகளுக்குப் புறம்பாக இயக்கப்படும் பள்ளி வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

### மாநில போக்குவரத்து ஆணையர் தகவல்

பள்ளி வாகனங்கள் உச்ச நீதி மன்றம் வழங்கிய வழிகாட்டுதலின்படி இயக்க வேண்டுமென்று பலமுறை அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து 2006 – ஆம் ஆண்டு அனைத்துப் பள்ளி நிர்வாகத்தினருக்கும் அறிவுரை வழங்கப்பட்டு தொடர்ந்து அனைத்துப் பள்ளி வாகனங்கள் மேற்கண்ட உச்ச நீதி மன்ற வழி காட்டுதலின் படி இயக்க வேண்டுமென்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மேற்கண்ட அறிவுரைகளுக்கு மாறாக சில பள்ளி வாகனங்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமான மாணவர்களை ஏற்றிச் செல்வதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இத்தகையச் செயல், பள்ளி குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு எதிராக இருப்பதுடன் விபத்துக்கள் நடக்க வழிவகை செய்கிறது. எனவே உச்சநீதிமன்ற வழிகாட்டுதலைக் கடைப்பிடிக்காமல் அளவுக்கு அதிகமாக பள்ளி மாணவர்களை ஏற்றிச்செல்லும் அனைத்து வகை வாகனங்களை சோதனைச் செய்யப்பட்டு வாகனத்தை கையகப்படுத்தி அனுமதிச் சீட்டு இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

பள்ளிகள் தமக்கென்று சொந்தமாக பள்ளி வாகனங்கள் வைத்துக் கொள்ளாமல், தனியார் வாகனங்களை ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு எடுக்கும்போது நல்ல திறமையான ஓட்டுநர்களை நியமித்து அவற்றை இயக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பள்ளி மாணவர்களை ஏற்றிச் செல்லும் அனைத்து வகை வாகனங்களையும் முறையாக பராமரித்து இயக்கவேண்டும் என்றும் வாகனங்களை முறையாக தினசரி சோதனை செய்ய வேண்டும் என்றும் போக்குவரத்துத் துறை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

முதன்மை செயலர்/
போக்குவரத்து ஆணையர்
சென்னை 600 005.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.